பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 06 2025 Monday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தீவிரவாதத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், கண்டிக்கத்தக்கது என்றும் இந்தியாவும் - சைப்ரசும் கூறியுள்ளன.
- அஹமதபாத் விமான விபத்து குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலை குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது
- ஈரான் - இஸ்ரேல் இடையேயான பதற்றம் காரணமாக, பெட்ரோலியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.
- பிரான்ஸுடனான கூட்டு பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய ராணுவத்தினர் இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.
- உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

தீவிரவாதத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், கண்டிக்கத்தக்கது என்றும் இந்தியாவும் - சைப்ரசும் கூறியுள்ளன.

அரசுமுறைப் பயணமாக சைப்ரஸ் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபருடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத செயல்களுக்கு நிதியுதவி வழங்குவது, தீவிரவாத கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுவது போன்ற நடவடிக்கைகள் முற்றிலும் ஒடுக்கப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாடும் இதர நாடுகளின் இறையாண்மைக்கு மதிப்பளித்து செயல்பட வேண்டும் என்றும் அந்த பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சைப்ரஸ் பயணத்தை முடித்துக் கொண்டு திரு. நரேந்திர மோடி, ஜி.7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக கனடா புறப்பட்டுச் சென்றார்.

தொடர்ச்சியாக ஆறாவது முறையாக ஜி.7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜதுரை 29 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>>

அஹமதபாத் விமான விபத்து குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலை குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், சிவில் விமான போக்குவரத்துத்துறையின் செயலர் மற்றும் குழுவில் இடம்பெற்ற இதர உயரதிகாரிகள் பங்கேற்றனர்

இந்த விபத்துக்கான காரணங்கள் குறித்தும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைப்பது குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>>

அஹமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று ராஜ்கோட்டில் நடைபெற்றன.

முன்னதாக, அஹமதாபாதிலிருந்து அவரது உடல் ராஜ்கோட்டிற்கு கொண்டு வரப்பட்டு, பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது.

இதற்கிடையே, இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களில் 92 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், 47 உடல்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

ஈரான் – இஸ்ரேல் இடையேயான பதற்றம் காரணமாக, பெட்ரோலியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக குறிப்பிட்டார்.

உயிரி எரிபொருள் மற்றும் பசுமை ஹைட்ரஜன் பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், ஐக்கிய அரபு எமிரேட்டின் வெளியுறவு அமைச்சர் Sheikh Abdullah Bin Zayed Al Nahyan தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து இந்த பேச்சுக்களின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அர்மேனியாவின் வெளியுறவு அமைச்சர் திரு. Ararat Mizoyan-ஐயும் திரு. ஜெய்சங்கர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தினார்.

<<<<<<>>>>>>>

நாடுமுழுவதிலும் உள்ள மருத்துவமனைகளில் கோவிட் சிகிச்சைக்கான உரிய வசதிகள் உள்ளதா என்பது குறித்து மத்திய அமைச்சர்கள் ஆய்வு செய்து வருவதாக நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் உள்ள மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் தங்களது தொகுதிகளுக்கு உட்பட்ட மருத்துவமனைகளை ஆய்வு செய்யுமாறு அறிவுறுத்தியதாக கூறினார்.

இதன் அடிப்படையில் இந்த ஆய்வினை மேற்கொண்டதாகவும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

ஆப்பரேஷன் சிந்தூருக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டையும், ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒருங்கிணைந்து, உலக நாடுகளுக்கு எடுத்துரைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக இதுபோன்ற ஒத்துழைப்பு ஒவ்வொரு நாளும் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, கடந்த 11 ஆண்டுகளாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, உலக பொருளாதாரத்தில் இந்தியா நான்காவது இடத்தை பிடித்துள்ளதாக திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

உலக சுகாதார அமைப்பு பயன்படுத்தும் 70 சதவீத தடுப்பூசிகள் இந்தியாவிலிருந்து பெறப்பட்டவை என்று மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, சர்வதேச அளவில் குறைந்த செலவில் சுகாதார சேவைகளை வழங்கும் முனையமாக இந்தியா உருவெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<>>>>>>>

பிரான்ஸுடனான கூட்டு பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய ராணுவத்தினர் இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இந்தப் பயிற்சி பிரான்ஸின் La Cavalerie –வில் நாளை மறுநாள் தொடங்கி, அடுத்த மாதம் 1ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான வருடாந்திர கூட்டுப் பயிற்சியின் ஒரு பகுதியாக இது நடைபெறவுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

அதிவிரைவு கண்காணிப்புப் படகு Achal கடலோர காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளது.

கடலோர காவல்படையின் கமாண்டர் திருமதி. Kavitha Harbola தலைமையில் கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த படகு இணைக்கப்பட்டது.

கோவா கப்பல் கட்டுமான நிறுவனம் இந்தப் படகினை உருவாக்கியுள்ளது.

எட்டு படகுகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் ஐந்தாவது படகாக இந்த படகு, கடலோர காவல்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

உத்தரபிரதேசத்தில் பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட வெடிவிபத்தில் 4 பெண்கள் உயிரிழந்தனர், 6 பேர் காயமடைந்தனர்.

Amroha மாவட்டத்தின் Atrasi-ல் செயல்பட்டு வரும் பட்டாசு தொழிற்சாலையில், இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கான காரணங்களை கண்டறிவதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் திருமதி. நிதி குப்தா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், மின்துறை மற்றும் தீயணைப்புத்துறை உயரதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் திருமதி. நிதி குப்தா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

ராஜஸ்தான் சட்டப்பேரவை தலைவர் திரு. Vadudev Devnani ஏழு நாள் அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி புறப்பட்டுச் செல்கிறார்.

புதுதில்லியிலிருந்து நாளை மாலை அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக ராஜஸ்தான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அந்நாட்டு நாடாளுமன்ற நடைமுறைகளை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இந்தப் பயணம் அமையும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

தெலங்கானா அரசு அமைக்கவுள்ள திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகத்திற்கு தேவையான உதவிகளை வழங்குவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்கும் என்று திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை தெலங்கானாவில் முழுமையாக செயல்படுத்துவது குறித்து தாம் அம்மாநில அரசுடன் விரிவாக பேச்சு நடத்தியதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத் மாநிலம், சௌராஷ்ட்ரா மற்றும் கட்ச் பகுதிகளில் நாளை அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அருணாச்சலபிரதேசம், சத்திஷ்கர், கர்நாடகா, மேற்குவங்கம், மஹாராஷ்ட்ரா, ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், மத்தியப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>>

உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி செப்டம்பர் 30ஆம் தேதி பெங்களூருவில் நடைபெறவுள்ள முதல்ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

பாகிஸ்தான் பங்கேற்கும் போட்டிகள் மட்டும் இலங்கையில் நடைபெறும் என்றும், எஞ்சிய போட்டிகள் அனைத்தும் இந்தியாவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரையிறுதிப் போட்டிகள் அக்டோபர் 29 மற்றும் 30ஆம் தேதிகளிலும், இறுதிப் போட்டி நவம்பர் மாதம் 2ஆம் தேதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணியில் காயம் காரணமாக ஆதித்ய ரானா மற்றும் Khilan Patel-க்கு பதிலாக Deepesh மற்றும் Naman Pushpak சேர்க்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>>

Cairns கோப்பை செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் Harika Dronavalli, Konneru Humpy ஆகியோர் கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

<<<<<<>>>>>>>

தஜுகிஸ்தானில் நடைபெறவுள்ள 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை தகுதிச் சுற்று கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>>>